ஸ்ரீ தந்வந்த்ரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

விரோதிகிருது
தை

FEBRUARY
1972

தொகுதி 34
பகுதி 2

Vol. 34
No. 2

ஆசிரியர் :
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராம சர்மா.

பிரசுரகர்த்தா :
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

வருஷச் சந்தா
ரூ. 5/-

எமது ஆசிரியர் மறைவு	...	21
மூன்று வைத்தியங்கள்	...	22
ஆரோக்கிய கல்பத்துருமம்	...	24

Annual
Subscription
Rs. 5/-

காரியாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன்: கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன்
போன் நெ 31
நர்ஸிங்ஹோம் போன நெ. 44
தலைமை வைத்யர் போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி (வீடு) போன் நெ. 27
(ஆபீஸ்) போன் நெ 61
மானேஜர் (வீடு) போன் நெ. 26

சென்னை கிளை:

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள்:

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்

31-A, சின்னகடைத் தெரு,

திருச்சிராப்பள்ளி-2.

போன் எண் : *4202.*

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு
முப்பது ஆண்டுகளாக
பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு :

ஸௌபாக்கிய ரஸாயனம்

ஜீர்ண சக்தி, ரத்த விருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5.

பயஸ்யா

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5.

— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில்
தயாரிக்கப் பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
-- மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.

மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON,
GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

M/s. KALIA BROTHERS (Regd.)

Wholesale Musk & Indian Drugs Merchants,

JULLUNDUR CITY (PUNJAB)

Gram: KALIA

Phone: Office - 3232
Resi. - 4343

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,
கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜலந்தர் ஸிடி (பஞ்சாப்)

தந்தி: KALIA

போன்: ஆபீஸ் - 3232
வீடு - 4343

தந்தி : "அம்ருதம்" P. B. No. 1382. போன் : 26006

ஸ்ரீ ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

**உண்மையான ஆயுர்வேத
மருந்துகளுக்கும்
சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.**

எங்களுடைய கிளைகள் :

1.	23 B, பூஸா ரோடு, புது டில்லி :	போன் ;	585687
2.	மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1	,,	2984
3.	கௌடியா மடத்தெரு, மதராஸ்-14	,,	85752
4.	வளிஞ்ஞம்பலம், எர்ணுகுளம், கொச்சின்-18	,,	32219
5.	பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1	,,	92
6.	மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1	,,	195
7.	கடைவீதி, பொன்னனி	,,	41
8.	ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1	,,	378
9.	கோர்ட் ரோடு, ஆலத்தூர்	,,	87
10.	மெயின் ரோடு, கஞ்சிக்கோடு		
11.	ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18	,,	33758
12	இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2	,,	4891
13	229, ராஜவீதி, கோயமுத்தூர்-1	,,	33988
14.	T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2		
15	No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னனி)		

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் 2)

நர்ஸிங்ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் : 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும் :

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00; 12 ML. ரூ 3-75

ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்கள்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது.]

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 34	விரோதிகிருது தை	பகுதி 2
Vol. 34	1972 பிப்ரவரி	No. 2

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।
यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

நம: சிவகுமாராய.

எமது ஆசிரியர் மறைவு

வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராமசர்மா அவர்கள் 7–2–72 திங்கள் இரவு 7–00 மணிக்குக் கரூரில் தமது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்கள் என்ற செய்தியை மிக வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அவர்களது மனப்பூர்வமான ஒத்துழைப்பாலும் உதவியாலும் வளர்ந்துள்ள பல ஸ்தாபனங்கள் இன்று ஆதரவற்றிருக்கும் நிலையில் சோகம் ததும்பி நிற்கின்றன. அன்னாரது சகோதரர்களும் புத்திரர்களும் இந்தப் பேரிழப்பில் வருத்தப்படும் ஒரு மாபெரும் மனித சமூகத்தைக் கண்டு ஆறுதல் கொள்ளவேண்டும். தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம், திருச்சி ஆயுர்வேதசபை, வைத்ய சந்திரிகை, திருச்சி ஆயர்வேதிக் யூனியன் முதலிய பல ஸ்தாபனங்கள் தமது ஒப்புயர்வற்ற தலைவனை இழந்து நிற்கின்றன. அன்னாரது ஆத்மா சாந்தியுடன் இறைவனடி நிழலில் சேர்ந்து அந்த ஸ்தாபனங்களின் பணிகளில் தோன்றாத் துணையாக நின்று உதவுமென்று நம்பி ஒருவாறு ஆறுதல் கொள்வோமாக!

———

மூன்று வைத்யங்கள்

ஆக்கல், காத்தல், அழித்தல் என்பன கடவுளின் மூன்று செய்கைகள். கர்மம், பக்தி, ஞானம் என வேதம் மூன்று கூருக உள்ளது. வாதம், பித்தம், சிலேஷ்மம் என வைத்யத்தில் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் மூன்று.

பிணி தீர்க்கும் வேளையில் தொன்றுதொட்டு இந்தியாவில் ஆயுர்வேத வைத்யம், சித்த வைத்யம், யூனானி வைத்யம் என்ற மூன்று முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. இம்மூன்று முறைகளிலும் வாத பித்த சிலேஷ்மங்கள் முக்யமானவை. மருந்துகள் வியாதி விபரங்கள் எல்லாம் மூன்று முறைகளிலும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டுள்ளன. ஆயுர்வேத முறையில் பல நூல்கள் எட்டு அங்கங்களைக் குறித்துத் தனித் தனியாகவே இருக்கின்றன. ஆகவே ஆயுர்வேத முறையை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் அதிக சிரமம் கிடையாது ஏனெனில் எட்டு அங்கங்களிலும் சில பாகங்கள் அதிகப்படியாக சேர்க்கப்பட வேண்டுமே தவிர புதியதாக ஏற்படுத்தப்படவேண்டியது ஒன்றுமே இல்லை. உதாரணமாக பிரஸவ சிகித்ஸையில் ஆயுர்வேத முறையில் நன்கு விளக்கம் இருந்தாலும் பிரத்யட்ச ஞானம் நன்கு தேவைப்படுகின்றதல்லவா ? அம்மாதிரி ஒவ்வொரு அங்கங்களிலும் நேர்முகமான அனுபவ ஞானம் இருந்து பழைய நூல்களைத் தழுவிய விரிவான நூல்கள் ஏற்படும் பட்சத்தில் நல்ல முறையில் பூர்ணமாக வைத்யத் தொழிலைக் கையாள முடியும். சித்த வைத்யத்திலும், யூனானி வைத்யத்திலும் இம்மாதிரி மிக மிகச் சிறந்த அம்சங்கள் நிறைய காணக் கிடைக்கின்றன. இவைகளை நல்ல அறிஞர்கள் மூலம் ஆராய்ச்சி செய்து எல்லாவற்றிற்கும் மூலாதாரமான வாத பித்த சிலேஷ்மங்களை நன்கு தெரிந்து கொள்ள அனுபவ ரீதியில் வழி தேடித் தரவேண்டும்.

இந்திய முறைகள் மூன்றும் மூன்று தெய்வம் போல் ஒன்றுக்கொன்று குறைகள் சொல்லப்பட முடியாதவையாகும். அவைகளில் எதிர்பார்த்தப்படி நினைத்த பலன்கள் வேண்டுமானுல் ஆராய்ச்சிகள் நன்ருக நடத்தப்பட வேண்டும்.

தவிர தற்சமயம் அனுபவத்தில் இருந்துவரும் பலவிஷயங்களை ஒன்று சேர்த்து கற்பிக்கும்படியாக ஏற்பாடு செய்ய வேண்டும். சித்தர் பாடல்களில் பல பாட்டுக்களுக்கு பொருள் விளங்கு

வதில்லை என்று எண்ணி சும்மா இருந்துவிடக் கூடாது. அவைகள் எல்லாம் உயர்ந்த கருத்துக்கள் செறிந்தவை. ஆகையால் ஆராய்ச்சியால் அவைகளின் கருத்துக்களை நன்ருகப் புரிந்துகொள்ள வேண்டும். ஆயுர்வேதமுறைப்படியோ வேறு முறைப்படியோ வியாதியைக் கண்டுபிடிக்கும் போது இதரவைத்ய முறைகளில் கூறப்பட்டுள்ள வியாதியைக் கண்டு பிடிக்கும் வழி தெரிந்து இருப்பது நல்லது வியாதிகளைக் கண்டுபிடிக்கும் வழிகளில் நாடிபார்ப்பது என்பதும் ஒன்று என்று இருந்தாலும் அது மிகவும் சூட்சும மானபடியால் அதில் சிரமப்படுவதுடன் வேறு வழிகளிலும் பிரயத்தனம் எடுத்துக்கொண்டால் மிக உபயோகமாக இருக்கும்.

பழயகாலத்துப்படியோ நவீன ரீதியிலோ பரீட்சைகள் நடத்தி சரீரத்தின் நிலையை தெரிந்து கொள்ளவேண்டும். இதற்குத் தகுந்தாற்போல் இம் மூன்று விதமான வைத்தியப் படிப்பும் அமையவேண்டும். அப்படியல்லாது நினைத்தப்படி மருந்துகளைக் கொடுப்பது என்பதனுல் உடல் கெட்டுப்போய் விடும் என்பது மட்டுமல்லாது வியாதியும் குணமடையாது என்பதை நாம் கவனித்தல் அவசியம்.

———

நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

ஆரோக்ய கல்பத்துருமம்

விஸர்ப்பத்தில் பொதுவான சிகித்ஸை

திக்த கிருதம்: பிரம்மி, பர்படகம், வேப்பம்பட்டை, பேய் புடல், கடுகுரோகிணி, ஆடாதோடை வேர், வட்டத்திருப்பி வேர், மரமஞ்சள் இவை வகைக்கு 40 கிராம்; மூன்றேகால் லிட்டர் ஜலத்தில் இவைகளை இடித்துப் போட்டுக் கஷாயமிட்டு அரைக்கால் பங்கு மீதமாகக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். பிரம்மி, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, திப்பிலி, வெட்பாலையரிசி, சந்தனம் இவை வகைக்கு 10 கிராம். இவைகளைக் கல்கமாக்கி 480 கிராம் நெய் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும். விஸர்ப்பம், குஷ்டம், பிடகை, எரிச்சல், நாவரட்சி, தலை சுற்றுதல், அரிப்பு, பாண்டு, கண்டமாலை, புரையோடிய விரணம், அபசி, விஸ்போடம், வித்ரதி, குல்மம், வீக்கம், வெண்குஷ்டம், காமாலை, மயக்கம், உந்மாதம், ஹிருதய ரோகம், மச்சம், கிரஹணி நோய், அர்சல், ரக்தபித்தம், பிரதரம், மஹோதரம், பகந்தரம், அபஸ்மாரம், கண்மறைப்பு முதலிய நோய்களைப் போக்க வல்லது. பித்த மிகுதியாலும் பித்தச் சீர்கேட்டாலும் ஏற்படும் நோய்களில் மிகச் சிறந்தது.

மஹாதிக்தக கிருதம்: தும்மட்டி வேர், ஆடாதோடை வேர், காஞ்சூரி வேர், பெருங்குரும்பை வேர், நன்னாரி வேர், மாகாளிக் கிழங்கு, வட்டத்திருப்பி, கோரைக்கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, வேப்பம்பட்டை, கொன்னைப்பட்டை ஏழிலம்பாலை பட்டை, நிலவேம்பு, மரமஞ்சள், மஞ்சள், பிரம்மி, திப்பிலி, கண்டந் திப்பிலி, பேய்ப்புடல், விலாமிச்சை வேர், பர்படகம், திரிபலை, பதிமுகம், வசம்பு, வெட்பாலையரிசி, அதிமதுரம், சந்தனம், கடுகு ரோகிணி, அதிவிடயம், சீந்திற்கொடி இவை கல்கம், நெய்யளவில் நான்கில் ஒரு பங்கு; நெய் ஒரு பங்கு, ஜலம் 8 பங்கு, நெல்லிக் காய் சாறு 2 பங்கு இவைகளைக் காய்ச்சி வடிகட்டிக்கொள்ளலாம். திக்தகிருதத்தைக் காட்டிலும் மிகவும் குணம்தர வல்லது.

பாரந்தீமூலவல்காதி கிருதம்: விருச்சி வேர் பட்டையின் கஷாயத்துடன் அல்லது விருச்சிப் பூவின் சாற்றுடன் திக்தக கிருத சாமான்களைக் கொண்டோ மகாதிக்தக கிருத சாமான்களைக் கொண்டோ கல்கம் தயாரித்து நெய் கூட்டிக் காய்ச்சி உபயோகிக்க மிகவும் குணமுள்ளது.

தூர்வாமிருதாதி கிருதம்: அருகம்புல், சீந்திற் கொடி, தண்ணீர் விட்டான் கிழங்கு, நெல்லிக்காய் இவைகளின் சாறு

மொத்தம் நாலு பங்கு, நெய் ஒரு பங்கு, அதிமதுரம் திரிபலை வாய்விளங்கம், பரங்கிப்பட்டை, திப்பிலி, கண்டதிப்பிலி, கருஞ் சீரகம், மாசிக்காய் இவை கல்கம் (நெய்யளவில் கால் பங்கு) இவைகளைக் கிருதமாகக் காய்ச்சி உபயோகிக்கவும். விஸர்பம், அக்கி, வீக்கம், சொரி, கெட்ட புண் முதலான எல்லா உபத்திர வங்களும் நீங்கும்.

நிம்பேந்திரயவாதி கிருதம்: வேப்பம்பட்டை, வெட்பாலையரிசி, புத்தரிச் சுண்டை வேர் பட்டை, தும்மட்டி வேர், ஆடாதோடை வேர், சிறுகாஞ்சூரி வேர், வட்டத்திருப்பி, வாய்விளங்கம், கோரைக் கிழங்கு, திரிபலை, பதிமுகம், மரமஞ்சள் தோல், கருங் காலி, அதிமதுரம், முள்ளிலவம் பட்டை, ஏகநாயகம் வேர், தேக்கின் பட்டை, ஏழிலம்பாலைப் பட்டை, வெள்ளெருக்கம் பட்டை, ஓம வேர், இவைகளின் கஷாயம் நான்கு பங்கு; தென்னம்பூ, தும்மட்டி, கையாந்தரை, கருமுருங்கை இலை, கரு நொச்சி இலை, சீந்திற் கொடி, ஸோமவல்லி யிலை, தேக்கிலை, பொன்னுங்கண்ணியிலை, பேய் புடல் இவைகளின் சாறு ஒரு பங்கு, நெய் ஒரு பங்கு, நால்பால் மரப்பட்டை கோரைக்கிழங்கு, சந்தனம், கோஷ்டம், அதிமதுரம், கரப்பான் பட்டை, வாய்விளங் கம், வெட்பாலையரிசி, செங்கழுநீர் கிழங்கு, வாழைக் கிழங்கு, மஞ்சிட்டி, மாசிக்காய், நன்னாரி, மாகாளிக் கிழங்கு, மருள் கிழங்கு, கார்போக அரிசி, கல் பாசி, கொத்துமல்லி விதை இவை கல்கம்; நெய் தயாரித்து உபயோகிக்க விஸர்பங்கள் அனைத்தும் மறையும்,

யலாஸோமலதாதி கிருதம்: சிற்றுமுட்டி வேர், ஸோமவல்லி, வில்வ வேர், பேய் புடல் வேர், நால்பால் மரப்பட்டை, வேப்பம் பட்டை, கொன்னைப் பட்டை, புத்தரிச் சுண்டை வேர்ப் பட்டை, மரமஞ்சள், கருங்குரிஞ்சி வேர், தேக்குப் பட்டை, தேவதாரு, மஞ்சிட்டிப் பொடி, முள்ளுக் கத்திரி வேர் இவைகளின் கஷாயம்; ஓரிலை வேர், மூவிலை வேர், ஜீரகம், கருஞ்சீரகம், சோம்பு, அதிமதுரம், அரத்தை, கருங்காலி வைரம், அகில், புங்கம் பட்டை, அரளிவேர்ப் பட்டை, திரிபலை, இலுப்பை வைரம், நன்னாரி வேர், மாகாளிக் கிழங்கு, செம்புரவள்ளிக் கிழங்கு, கோரைக் கிழங்கு, வாழைக் கிழங்கு, கடுகு ரோஹிணி, வெட்பாலை அரிசி, செங்கழு நீர்க்கிழங்கு, பதிமுகம் விருச்சிமொட்டு, விலாமிச்சை, கார்போக அரிசி, வெள்ளைச் சாரணை வேர், கோரோசனை, கச்சோரம், மான் கொம்பு, ஆமையோடு, முத்துச்சிப்பி தாளகம், பவழம், எருக்கம் பழுப்பு, பேய்பீர்க்கு வேர், பீர்க்கு வேர், தும்பைப்பூ, ஓமம், ஜீரகம் இவை கல்கம்; நெய், நெய்க்குச் சமம் நெல்லிக்காய், கரும்பு இவைகளின் சாறு; இவைகளை நெய்யாகக் காய்ச்சி, மேலுக்குத் தடவி உள்ளுக்கும் சாப்பிட விஸர்ப்பங்கள் போகும். பலம் அதிக மாகும். பூதோபத்திரவங்கள் நீங்கும்.

விஸர்ப்பாந்தக கிருதம்: காட்டுத் துளசி வேர், வில்வ வேர், ஆடாதோடை வேர், காஞ்சூரி வேர், குமிழம் வேர், காட்டு முல்லை வேர், ஏகநாயகத்தின் வேர், கருநொச்சி வேர், பூனைக்காலி வேர், ஓரிலை வேர், மூவிலை வேர், பெருங்குரும்பை, அகோரி வேர், வட்டத்திருப்பி, தும்மட்டி வேர், பேய் பீர்க்கின் வேர் இவைகளின் கஷாயம்; நால்பால் மரப்பட்டை, கஞ்ஜிக்கொட்டம் பட்டை, கருங்கொட்டம் பட்டை, நரச்சிக்கொட்டம் பட்டை இவைகளின் கஷாயம்; துளசி, கருத்தும்பையிலை, கல்யாண முருங்கையிலை, தென்னம்பூ இவைகளின் சாறு; நெய்யும் தேங்காய் எண்ணெயும் சம அளவு, ஏலரிசி, வெட்பாலையரிசி, சிறுதேக்கு, கோரைக்கிழங்கு வாய்விளங்கம், கொத்துமல்லி விதை, அதிமதுரம், வாலுழுவை, கார்போகரிசி, வீலாமிச்சை வேர், ஜீரசம் இவை கல்கம்; இவைகளைக்கொண்டு நெய் தயாரிந்து மேலுக்கும் பூசி உள்ளுக்கும் சாப்பிட விஸர்பங்கள் நீங்கும்.

ஸித்தயோக கிருதம்: கருங்காலி வைரம் 4 கிலோ இடித்து 64 லிட்டர் ஜலத்திலிட்டுக் கஷாயமிட்டு 4 லிட்டர் மீதமாகக் காய்ச்சி, சம அளவு ஸோமவல்லி கஷாயம் சேர்த்து வடிகட்டிக் கொள்ளவும். திரிகடு, திரிபலை, அதிமதுரம், கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், சதகுப்பை, கொத்துமல்லி விதை, ஏலரிசி, வெட்பாலையரிசி, சிறுநாகப்பூ இவை கல்கம், நெய் 640 கிராம். கிருதமாகக் காய்ச்சிச் சாப்பிட எல்லா விஸர்ப்பங்களும் நீங்கும்.

அம்ருதாபிருஹத்யாதி கிருதம்: சீந்திற்கொடி, முள்ளுக்கத்திரி வேர் இவைகளின் கஷாயம், ஜாதி இலை, கூர்க்கிலை கஞ்ஜிக் கூர்க்கிலை, திருச்சிடை, பாகல் இலை, நாவலிலை, பெருங்குரும்பை சிறுநாதல் பூ கஞ்ஜிக்கொட்டத்தின் இலை, அவுரி இலை, மலையமுக்கி வேர், கல்யாண முருங்கை இலை இவைகளின் சாறு; சந்தனம், கோரைக்கிழங்கு, திரிபலை, ஏலரிசி, லவங்கப்பட்டை, பச்சிலை, சிறுநாகப்பூ, அதிமதுரம், கோஷ்டம் இவை கல்கம், நெய் சேர்த்துக் காய்ச்சிக்கொள்ளவும், எல்லா விஸர்பங்களும் புண்களும் போம்.

விஸர்ப்ப நோயில்:

முக்கடிகள்: முக்கடி என்பது மோரில் மருந்து சரக்குகளை வேகவைத்து அரைத்துக் கலக்கி மறுபடியும் கொதிக்கவைத்து எடுத்துக்கொள்ளப்படும் ஒருவகை மோர்க்குழம்பாகும்.

விருச்சிப்பூ, புளியாரை இலை, மாசிக்காய், கோரைக்கிழங்கு, கொத்துமல்லி விதை இவைகளை மோரில் வேகவைத்தரைத்துக் கலக்கிக் கொதிக்கவைத்து எடுத்துச் சாப்பிட எல்லா விஸர்ப்பங்களும் நீங்கும்.

அம்ல வேதஸப்புளி (நெரிஞ்சாம்புளிக்கிழங்கு), புளியாரை இலை, விருச்சிப்பூ, கொத்துமல்லிவிதை, மாதுளை ஓடு, வெட்பாலையரிசி, கோரைக்கிழங்கு இவைகளைக்கொண்டு முக்கடி தயாரித்து சாப்பிட நல்லது

மூக்கரட்டை வேர், கஞ்ஞிக்கொட்டத்தின் துளிர் இவைகளைக்கொண்டு முக்கடி தயாரித்து உபயோக்கலாம். அதில் மாசிக்காய்தூள் சேர்த்துச் சாப்பிடவேண்டும்.

சீந்திற்கொடி, கோரைக்கிழங்கு, புத்தரிச்சுண்டைவேர் மேல் பட்டை, தென்னம்பூ, பப்பாளி இலை, நன்னாரிக்கிழங்கு, கச்சோரக் கிழங்கு, விரிச்சிப்பூ, புளியாரை இலை, ஜீரகம், கருஞ்ஜீரகம், பெருஞ்ஜீரகம், நாயுருவி, மாசிக்காய், கார்போகரிசி, வாலுளுவை வாய்விளங்கம், ஏலரிசி, அம்லவேதஸம், மாதுளை ஓடு, திப்பிலி, ஜாதிக்காய், மருதிலை இவைகளால் தயாரித்த முக்கடி இந்துப்பு சேர்த்துச் சாப்பிட மிகவும் நல்லது.

புடபாக கஷாயங்கள்: மருந்துச் சரக்குகளை இலைகளால் சுற்றி மேல் மண் அல்லது சாணம் பூசி அல்லது தேங்காய் போன்றவைகளினுள் வைத்து வைத்து மேல் மண் பூசி, நெருப்பிலிட்டு அவித்தெடுத்து உள்ளிருப்பவைகளைச் கசக்கிப் பிழிந்தெடுத்த சாற்றுக்கு புடபாக கஷாயம் எனப்படும்.

தேக்கின் துளிர், அருகம்புல், வரள் மஞ்சள், மரமஞ்சள் தோல், விருச்சிமொட்டு, கடுக்காய், வாய்விளங்கம், மாசிக்காய், ஜாதிக்காய், திப்பிலி, ஆனைத்திப்பிலி, கல்யாணமுருங்கைத்துளிர் இவைகளைத் தேங்காயினுள் இளநீர் வெளியாகாமல் செலுத்தி மூடி சாணமும் புற்று மண்ணும் சேர்த்து சீலைமண் செய்து தணல் நடுவே வைத்து அரை யாமம் எரிக்கவேண்டும். பிறகு அதை எடுத்து உள்ளிருக்கும் இளநீருடன் கலந்த சரக்குகளை வெளியே எடுத்துக் கசக்கி வடிகட்டித் தேன்சேர்த்துச் சாப்பிட விஸர்ப்பம் போகும்.

வாய்விளங்கம், வெட்பாலையரிசி, ஏலரிசி, கார்போகரிசி, கொத்துமல்லிவிதை, பர்படகம், வாலுளுவையரிசி, அருகம்புல், தேக்கின் துளிர், கல்யாணமுருங்கைத்துளிர், ஜீரகம், கருஞ்ஜீரகம் பெருஞ்ஜீரகம், விருச்சிப்பூ, கோரைக்கிழங்கு, கடுக்காய், பேய்த்தும்மட்டிவேர், நன்னாரிக்கிழங்கு, மலைநன்னாரி, மாசிக்காய் இவைகளை முன்போல் தேங்காயினுள் செலுத்தி அவித்து எடுத்துப் பிழிந்த சாற்றைத் தேனும் மாசிக்காய்த்தூளும் சேர்த்துச் சாப்பிட நல்லது.

வாய்விளங்கம், நெல்லிக்காய், மூக்கரட்டைவேர், முள்ளிலவ வேர், வரள்மஞ்சள், மரமஞ்சள்தோல், நால்பாமரப்பட்டை,

கஞ்ஞிக்கொட்டத்தின் வேர் பட்டை, தேக்கம் பட்டை, கடம்பம் பட்டை, ஓமவேர், கருஞ்சீரகம், ஜீரகம், பெருஞ்சீரகம், தேவதாரு, கிராம்பு, சந்தனம், அதிமதுரம், திராக்ஷை கருங்காலிவைரம், கல்பாசி, இலுப்பை வைரம், விலாமிச்சைவேர்—இவைகளை முன் போலத் தேங்காயினுள்ளிட்டு வேகவைத்துப் பிழிந்து சாப்பிட நல்லது.

வாத விஸர்ப்பங்கள்

திலகவிஸர்ய்பம்

அளவில் எள்ளுபோன்று, கருத்தோ சிவந்தோ கொப்புளங்கள் ஏற்பட்டு மலபந்தம், கண்சிகப்பு தலைவலி. சந்திகளில் வலி எலும்புகளில் வலி, இவைகளுடன், சரீரத்தின் ஓர் அங்கத்திலோ எல்லா அங்கங்களிலுமோ கடுமையான வலியுடன் வீக்கமும் ஏற்பட அது திலக விஸர்பம் (எள்ளுக்கரப்பான்) எனப்படும்

சிகித்ஸை, நன்னாரிவேரையோ, வெம்பாடம் பட்டையோ தேங்காய்ப்பால் விட்டரைத்து அடிக்கடி தேய்த்து வரலாம். மஞ்சிட்டி, நன்னாரிவேர், கோரைக்கிழங்கு இவைகளைத் தயிர் தெளிவில் அரைத்துக் கலக்கிப் பூசலாம் கோரைக்கிழங்கு வேப்பம்பட்டை பேய்ப்புடல் பேராமுட்டி தேவதாரு, விரளி மஞ்சள், மரமஞ்சள் இவைகளைக் கொண்டு கஷாயம் வைத்து கடுகுரோகிணி மேம்பொடி சேர்த்துக்கொடுக்கலாம் நன்னாரிவேர் விலாமிச்சைவேர், மூக்கரட்டை சிறுகாஞ்சூரிவேர், திராக்ஷை, கடுக்காய் இவைகளைக் கஷாயமிட்டு கடுகுரோகிணிப்பொடி சேர்த்தும் கொடுக்கலாம். சரீரபலத்தை அனுசரித்து வயிறு இளக்கி விடுவதும் நல்லது. பேதியாக அப்பொழுது காய்ந்து சூடாக இருக்கும் பாலுடன் சிற்றாமணக்கெண்ணெய் சேர்த்துச் சாப்பிடலாம், செவதை வேரின் தூளை தேங்காய்ப் பாலில் விட்டு கலக்கிச் சாப்பிடலாம்.

அவிபத்தி சூர்ணம்: வாய்விளங்கம், நெல்லிக்காய், கோரைக் கிழங்கு, ஏலரிசி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி இவை வகைக்கு சமனெடை, எல்லாவற்றிற்கும் சமம் சிவதைவேர், இவைகளை இடித்து ஸம அளவு சர்க்கரை சேர்த்து தேன் சேர்த்து சாப்பிடலாம். இதனால் நன்கு மலமிளகிய பிறகு கொத்துமல்லிவிதை பர்படகம், கோரைக்கிழங்கு மரமஞ்சள் வாய் விளங்கம், மஞ்சிட்டி, தேவதாரு இவைகளைக் கஷாயமிட்டு தேனோ குக்கிலோ சேர்த்துக் கொடுக்க வேகம் தணியும். மஞ்சிட்டி மயிலெள்ளின் தோல், விலாமுச்சை, வெம்பாடம் பட்டை தேவதாரு, கோரைக்கிழங்கு பர்படகம், மரமஞ்சள்தோல், பிரம்பு,

சுக்கு, புங்கம்பட்டை, பேய்ப்புடல் இவைகளை கஷாயமிட்டு தேன் சேர்த்துக் கொடுக்கலாம். இந்த கஷாயத்திலேயே பரங்கிப் பட்டையையும் சேர்த்துக்கொள்வது நல்லது.

வீக்கம் வற்றுமலிருந்தால், மயிலெள்ளின் தோல் ஏகநாயகத்தின் வேர் பட்டை, இவைகளுக்கு, சமம் சிவநார்வேம்பு சேர்த்துக் கஷாயமிட்டு வடிகட்டி அதில் சமஅளவு பசுவின்பால் சேர்த்து பால் மீதமாகும்வரை காய்ச்சி வடிகட்டி, அதில் மோர்கூட்டி உரை குத்தி மறுநாள் அதிலிருந்தும் வெண்ணெய் எடுத்து மேல் பூசலாம். இதை உள்ளுக்கும் சாப்பிடலாம். நெல்லிக்காய் அதிமதுரம் மஞ்சிட்டி சந்தனம் இவைகளைத் தூள்செய்து மேற் கூறிய நெய்யில் குழப்பி தலையில் தேய்த்துக்கொள்ள தலையில் ஏற்படும் கொதிப்பு குறையும். அல்லது இத்தூளை முலைப்பால் விட்டுக் குழப்பியோ, அல்லது நெல்லிமுள்ளியையும் சந்தனத்தையும் முலைப்பாலில் இழைத்தோ தலையில் இடலாம். சூடு தணியும்.

சென்னி நாயகம், கல்நார், விலாமுச்சம்வேர், வெட்டிவேர், சந்தனம், கோரைக்கிழங்கு, இவைகளைத் தூள்செய்து முலைப் பாலில் குழப்பி நெற்றியிலிட, தலைவலி கண் சிகப்பு குறையும், இந்த வெண்ணெய்ப் பூச்சு தலைப்பூச்சு, நெற்றிப்பூச்சு முதலியவைகள் எல்லாவித கரப்பானிலும் உபயோகிக்கத் தகுந்தவையே.

சிதிகிம்சுகாதிதைலம்:- கல்யாண முருங்கைஇலை, கருநொச்சி கஞ்சுகொட்டஇலை, புல்லானிஇலை இவைகளின் சாற்றில் சிறிய வாலுளுவையரிசி, வாய்விளங்கம், ஏலரிசி, கருஞ்சீரகம் இவைகளையரைத்துக் கலக்கி விருட்சிப்பூவின் (வாட்டிப்பிழிந்த) சாறும் தேங்காய் எண்ணெய்யும் சமஅளவு சேர்த்துக் காய்ச்சி வடிகட்டி அதை சாப்பிட நல்லது.

துளஸிதூர்வாதி தைலம்:- துளஸி, அருகம்புல், பூவரசம் துளிர், பசுமஞ்சள், இவற்றின் சாற்றில் திருபலை, இலுப்பைவைரம், மஞ்சட்டி, கோஷ்டம், அதிமதுரம், சந்தனம் இவைகளை அரைத்துக்கலக்கி, தேங்காய் எண்ணெய்யில் கூட்டி, தேங்காய் எண்ணெய்க்கு இரண்டு பங்கு விருட்சிப்பூவின் வாட்டிப்பிழிந்த சாறு சேர்த்துக் காய்ச்சிய தைலம் சாப்பிட மிகவும் நல்லது இந்த சிதிகிம்சுகாதிதைலமும் துளஸீதூர்வாதி தைலமும் திலகத்தில் மிகச் சிறந்தவை

கதிராம்புதாதி தைலம்: கருங்காலி வைரம், கோரைக்கிழங்கு, அதிமதுரம், வில்வவேர், தேவதாரு, சிற்றுமுட்டி இவைகளைக் கஷாயம் வைத்துக்கொள்ளவும். கஷாயம் எண்ணெய்க்கு சம அளவு. அதே அளவு விருட்சிச்சாறு, இரண்டு பங்கு கருசலாங்

கண்ணிச்சாறு, கல்யாண முருங்கைஇலைச்சாறு 2 பங்கு, மலையமுக்கிச்சாறு மூன்று பங்கு, கல்கமாக திரிபலை, கச்சோரம், மஞ்சிட்டி, அகில், சந்தனம், வெட்டிவேர், விலாமுச்சவேர், கோஷ்டம், அதிமதுரம், தேவதாரு, ஏலரிசி, ஸரளதேவதாரு, சிறுநாகப்பூ, ஜடாமாஞ்சி, அஸாரூன், முத்துச்சிப்பி இவைகளை அரைத்து கலக்கி நல்லெண்ணெய்யோ தேங்காயெண்ணெய்யோ கூட்டி சம அளவு தேங்காய்பாலும் சேர்த்து தைலம் காய்ச்சவும். இதை தலைக்குத் தேய்த்து நெல்லிக்காய் போட்டுக் காய்ச்சிய வென்னீரைவிட்டு ஸ்னானம் செய்க. குளிர்ந்த ஜலத்தில் ஸ்னானம் செய்யக்கூடாது.

பலாமதுகாதி தைலம் : சிற்றுமுட்டிவேர், அதிமதுரம், கொம் பரக்கு, வெம்பாடம்பட்டை இவைகளைக் கஷாயமிட்டும், ஏலரிசி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, பச்சிலை, சிறுநாகப்பூ, கச்சோரம், அமுக்கராக்கிழங்கு, ஸரளம், சந்தனம், கல்பாசி, விலாமுச்சை, சோனகப்புல், வெட்டிவேர், நான்முகப்புல், அதிமதுரம், குந்துருக்கம், வரளி மஞ்சள் கோஷ்டம், நன்னாரிக் கிழங்கு, இவைகளை அரைத்துக் கலக்கி தேங்காய் எண்ணெயும் அதற்கு சமம் தயிர் தெளிவும் கூட்டித் தயாரித்த தைலத்தை கழுத்துக்குக் கீழ் தேய்த்து ஸ்னானம் செய்யவும். குளிக்கும்போது கருங்காலி போட்டு காய்ச்சிய வென்னீரை உபயோகிக்கவும்.

கண்ணிலுள்ள சிகப்பு மாற மரமஞ்சள் தோல், கொத்துமல்லி விதை, நந்தியாவட்டை மொட்டு இவைகளை எடுத்து கிழிகட்டி முலைப்பாலில் தேய்த்து எடுத்துக் கண்ணில் பிழிய கண்கள் தன்னிலைக்கு மாறி வலி குறையும்.

தான்யக விஸர்பம்

நெல் கரப்பான் என்பர் இதை. நவரை அரிசியின் அளவில் கொப்புளங்கள் நிரம்பக் காணும். கடும் ஜ்வரம், கண்ணீர் எப் போதும் அதிகமாகப் பெருகுதல், வீக்கம் உயர்ந்திருக்கும்; தலை சுற்றல், பிதற்றல், தலைவலி, வாந்தி, அரோசகம் உண்டாகும். ஆங்காங்கு தனித்தனியாக உண்டாகி, பிறகு எல்லாம் ஒன்ருகக் கூடும். மலமூத்ரக்கட்டு, அக்னி மந்தம், தொண்டைக்கம்மல், இருமல், தொண்டை வரட்சி, இவைகளுண்டாகும். இதற்கு தான்யகம் எனப்பெயர்.

சிகித்ஸை : தேங்காய்ப்பாலில் சதகுப்பையை அரைத்துத் தடவலாம். உண்டான உடன் தடவ இதனல் குணமுண்டு தேவதாரு, கருந்துளசி, கோரைக்கிழங்கு, கொத்தமல்லி விதை, கோஷ்டம், நிலப்பனைக்கிழங்கு இவைகளில் ஒன்றைத் தேங்காய்

பாலில் அரைத்துப் பூச நல்லது மலபந்தமிருந்தால் அதற்கேற்ற ஔஷதங்களால் விரேசனம் செய்விக்கலாம். திலகவிஸர்பத்தில் கூறப்பட்டுள்ள முறைகளையும் கையாளலாம்.

திராக்ஷாஷ்டம கஷாயம் : கோரைக்கிழங்கு, தேவதாரு, சிற்ருமுட்டிவேர், வேப்பம்பட்டை, பேய்புடல், மஞ்சள், மரமஞ்சள், திராக்ஷை என்ற எட்டு சரக்குகளைக்கொண்டு கஷாயம் வைத்து கருஞ் சீரகத்தூள் மேம்பொடி சேர்த்துக்கொடுக்கலாம்.

தாத்ரியாதி கஷாயம் : நெல்லிமுள்ளி, பேய்புடல், கோரைக்கிழங்கு இவை ஸம னெடை; இவற்றிற்கு சமம் விருச்சிப்பூ இவைகளைக் கஷாயமிட்டு, மாசிக்காய் தூள் மேம்பொடி சேர்த்துக் கொடுக்கலாம்.

தூர்வாதி தைலம் : அருகு, பப்பாளியிலை, கருநொச்சி இலை, கல்யாண முருங்கை இலை இவைகளை இடித்து சாறுபிழிந்து எடுத்தது 4 பங்கு; தேங்காய் எண்ணெய் ஒரு பங்கு, தேங்காய்ப்பால் ஒரு பங்கு, கருஞ்சீரகம், அதிமதுரம், ரஸாஞ்சனம் இவைகளை எண்ணெய்க்கு அரைக்கால் பங்கு, இவைகளைத் தைலமாக முறைப்படி காய்ச்சி ஏழு நாட்கள் தினமும் சாப்பிட இது குறையும்.

வேத்ர பல்லவாதி தைலம் : பிரப்பந்துளிர், துளசி, முள்ளங்கத்திரி, இலைச்சாறு, இவை 4 பங்கு, தேங்காய் எண்ணெய் ஒரு பங்கு, இதற்கு அரைக்கால் பங்கு செம்புராவள்ளி (மலையாளம்) கிழங்கின் கல்கம் இவைகளைக் கலக்கி தைலம் காய்ச்சியும் சாப்பிடலாம்,

பொதுவாக திலக விஸர்ப்பத்திற்குக் கூறப்பட்டுள்ள சிகித்ஸை இதற்கும் நல்லதே. வீக்கமதிகமிருந்தால், பாலில் கோரைக்கிழங்கை அரைத்துக் கலக்கி தாரையிடலாம். மூத்திரக்கட்டு இருந்தால் கருநொச்சி நெரிஞ்சில்முள், மூக்கரட்டைவேர், பூசணிக்கொடி, இவைகளைக்கொண்டு கஷாயமிட்டுக் கொடுக்கலாம்.

கல்ல விஸர்ப்யம் : கொள்ளுக்கரப்பான் என்று இதைக் கூறுவர். கொள்ளின் உருவில் உடல் முழுவதும் சிவந்தும் கருத்தும் வீங்கி வெடிப்பும் வரட்சியும் சேர்ந்து உபத்திரவிக்கும்.

சிகித்ஸை : சித்தாமுட்டிவேர், சித்தரத்தை, தேவதாரு, தகரவிதை, சந்தனத்தூள், கடுக்காய், கருவேலம்பட்டை, கீழாநெல்லி இவைகளையோ, கொம்பரக்கு, கோரைக்கிழங்கு, சந்தனம் இவைகளையோ, தேங்காய் பூ, சதகுப்பை, ஜீவகம், ருஷபகம் இவைகளையோ தேங்காய்பாலில் அரைத்துக் கலக்கி மேல் தேய்த்துக் கொள்ளலாம்.

படோலாதி கஷாயம்: பேய்புடல், வேப்பம்பட்டை, மரமஞ்சள் தோல், நிலவேப்பு, அதிமதுரம், பிராம்மீ, கடுக்காய், ஆடாதோடைவேர் இவைகளைக் கஷாயம் வைத்து திப்பிலி மேம்பொடி, சேர்த்துக்கொடுக்கவும். பலமுள்ள ரோகியானால் விரேசனம் செய்விக்கவும். அதற்கு திலகவிஸர்ப்பத்தில் சொன்ன முறையே போதும்

விடங்காதி கஷாயம்: வாய் விளங்கம், கோரைக்கிழங்கு, விருச்சிப்பூ, கருஞ்சீரகம் இவைகளைக் கஷாயம் வைத்து வரள் மஞ்சள் தூள் மேப்பொடி சேர்த்துக்கொடுக்கலாம்.

புனர்னவாதி தைலம்: மூக்கரட்டைவேர், கடுக்காய் தானிக்காய், நெல்லிமுள்ளி, அதிமதுரம் இவைகளின் கஷாயம் நான்கு பங்கு, அதிமதுரம், அஞ்சனக்கல், கோஷ்டம், கோரைக்கிழங்கு, சந்தனம், வைரம், இவைகளைக் கல்கமாக்கி அரைக்கால்பங்கு, புளிவஞ்சி, எலுமிச்சம்பழம், கல்யாண முருங்கிலை இவைகளின் சாறு தேங்காய் எண்ணெய்க்குச் சமபங்கு, இவைகளைக் கூட்டி தைலம் காய்ச்சி சாப்பிடலாம்.

மற்றப்படி திலக – தான்ய விஸர்ப்பங்களில் கூறியவையே பொதுவாகப் போதுமானது. விசேஷமாக சில முறைகளைக் கூறுவோம்.

உசிராதி தைலம்: விலாமுச்சம்வேர், கோரைக்கிழங்கு, இவைகளின் கஷாயம் நான்கு பங்கு, தேங்காய் எண்ணெய் ஒரு பங்கு, நெல்லிக்காய்சாறு ஒரு பங்கு, ஸரளதேவதாரு, சோனகப்புல், கச்சோரக்கிழங்கு, சந்தனம், அதிமதுரம், வாலுளுவை, கார்போகரிசி, குடவெட்பாலையரிசி, வெட்டிவேர் இவைகளின் கல்கம் அரைக்கால் பங்கு இவைகளைத் தைலமாகச் காய்ச்சித் தலைக்குத் தேய்த்துக் குளிக்கவும்.

மஞ்சிஷ்டாதி தைலம்:- மஞ்சிட்டிப்பொடி, நன்னாரிக்கிழங்கு, கோஷடம், வெட்டிவேர், சந்தனம், அதிமதுரம் இவைகளைக் காடி விட்டரைத்துக் கல்கம் கால்பங்கு சேர்த்துத் தேங்காய்எண்ணெய் காய்ச்சி உடலில் தேய்த்துக்கொள்ளவும். அல்லது கொம்பரக்கு சித்தாமுட்டி அதிமதுரம் இவைகளின் கஷாயம் 4 பங்கு முன் கூறிய கல்கம் சேர்த்துத் தேங்காய் எண்ணெய் காய்ச்சி வடித்தும் தேய்த்துக் கொள்ளலாம். ஸ்னானம் செய்ய விருச்சி இலை இட்டு வென்னீர் காய்ச்சிக் கொள்ளவும்.

கபிச விஸர்ப்பம்

கருப்பும் சிவப்பும் கூடிய நிறத்திலுள்ள சினப்புகளுடன் கருத்து சற்று உயர்ந்தும் வீக்கத்துடனும் காணும் கரப்பான்;

ஜ்வரம், வாந்தி, மூர்ச்சை இவைகளை அடிக்கடி உண்டாக்குவது கபிச கரப்பானாகும்.

சிகித்ஸை—மேல்பூச்சு: கஞ்ஞிக்கொட்டம் வேரின் மேல் தோலை மோரிலோ தேங்காய்ப்பாலிலோ அரைத்து மேல் பூசலாம்.

கருஞ்செவதை வேரின் மேல்தோலைப் பொடித்து திராக்ஷை கஷாயத்தில் கலக்கி மலமிளக்கிக் கொள்ளலாம். துர்பலனாகில், பாசிபயற்றம் பருப்பும் நெல்லிமுள்ளியும் சேர்த்துக் கஷாயமிட்டு செவதைவேர் மேல்தோல் மேம்பொடி சேர்த்துச் சாப்பிட்டு மல மிளக்கிக் கொள்ளலாம்.

குடஜாதி கஷாயம: வெட்பாலையரிசி, நெல்லிமுள்ளி, தான்றிக்காய் தோல், கடுக்காய் தோல், கோரைக்கிழங்கு, பேய்ப்புடல், விலாமிச்சைவேர், சுக்கு, பிரம்மிப்பூண்டு, நிலவேம்பு இவை கொண்டு கஷாயம் வைத்து கருஞ்சீரகம் மேம்பொடி சேர்த்து ஸேவிக்கலாம், அல்லது கல்யாண முருங்கைப் பட்டை, விருக்ஷிப்பூ, கோரைக்கிழங்கு இவைகளைக் கொண்டு கஷாயம் வைத்துத் தேன் சேர்த்துச் சாப்பிடலாம்.

கொள்ளுக் கரப்பானில் கூறப்பட்ட தைலத்தை மேலுக்கும் தலைக்கும் தேய்த்து விடலாம் தான்யக விஸர்ப்பத்தில் கூறிய வெண்ணீர் ஸ்னானமும் திலக விஸர்ப்பத்தில் கூறிய மற்ற வழிகளையும் இதில் அனுஸரித்தல் நலம்.

கபிலவிஸர்ப்பம்

ஒட்டகமயிர் போன்ற நிறத்திலுள்ள மெல்லிய நீண்ட சினப்புகளுடன் கூடியதும், நீலநிறத்துடன் வீங்கிக்காணும் கரப்பான்; கண்ணில் சிகப்பு, ஜ்வரம். நாவரட்சி உள்ளது; காரணமில்லாமல் வளர்வதும் குறைவதும் காணப்படும்; இதற்குக் கபிலவிஸர்ப்பம் எனப்பெயர்.

சிகித்ஸை: சந்தனம், விருக்ஷிவேர் மேல் தேல், சதகுப்பை, மூக்கரட்டைவேர் இவைகளைத் தேங்காய்ப் பாலில் கரைத்து மேல் பூசவும். அல்லது வெளுத்த செம்பரத்தைவேர், மரமஞ்சள், திரிபலை இவைகளைத் தேங்காய் பாலிலோ தயிர்த் தெளிவிலோ கரைத்துத் தேய்க்கலாம்.

பூநிம்பாதி கஷாயம்: புத்தரிச்சுண்டை வேரின் மேல் தோல், மரமஞ்சள், அதிமதுரம், நன்னாரிவேர், வேப்பம்பட்டை, தும்மட்டி வேர், சீந்திற்கொடி, சுக்கு இவைகளின் கஷாயத்தில் கடுகு ரோகிணித் தூளும் சர்க்கரையும சேர்த்துச் சாப்பிடலாம்;

மலமிளகும் அல்லது ரோகி நல்ல பலசாலியானால் திலக விஸர்பத்தில் கூறின ஔஷதத்தைக் கொண்டு மலமிளக்கச் செய்யலாம்.

கதம்பவல்காதி கஷாயம்: கடம்பின்பட்டை, சோனகப்புல், புத்தரிச்சுண்டைவேரின் மேல்தோல், தேவதாரு, மாசிக்காய், அதிமதுரம், முள்ளிலவம்பட்டை, நெரிஞ்சில், ஏலரிசி, வெட்பாலை அரிசி, கொத்துமல்லிவிதை, கார்போகரிசி, வாய்விளங்கம், வாலுளுவை, கஞ்ஞிக்கொட்டத்தின் வேரின் மேல்தோல் இவைகளைக் கஷாயம் வைத்து கருஞ்சீரகத்தூளும் தேனும் சேர்த்துச் சாப்பிடலாம்.

முஸ்தாயஷ்ட்யாதி தைலம்: கோரைக்கிழங்கு, அதிமதுரம், பேய்புடல், முன்னைவேர், சீந்திற்கொடி இவைகளைக்கொண்டு கஷாயம் தயாரித்து தேங்காய்எண்ணெய் சேர்த்து கருஞ்சீரகம், கடுக்காய், மாசிக்காய், கோஷ்டம் சந்தனம், தூணியாங்கம், விலாமிச்சைவேர். சோனகப்புல் இவைகளை முள்முருங்கை இலைச்சாறு விட்டரைத்துக் கலக்கித் தைலம் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். இதைச் சாப்பிட நல்லது.

பலாமூலாதி தைலம்: சித்தாமுட்டிவேர், தண்ணீர்விட்டான் கிழங்கு, தேவதாரு, திரிபலை இவைகளின் கஷாயத்தில், அருகம் புல், நொச்சி, முள்முருங்கையிலை, ஜாதிஇலை, வேப்பிலை, கஞ்ஞிக் கொட்டத்தினிலை, தென்னம்பூ, பாகலிலை, பேய்புடல், வெற்றிலை, தாழலிலை, முடக்கத்தான் இவைகளின் சாறும் சேர்த்து, கோஷ்டம், அதிமதுரம். குந்துருக்கம், சந்தனம், புங்கின்விதை, மஞ்சிட்டி, நன்னரி, கோரைக்கிழங்கு, ஏலரிசி, லவங்கப்பட்டை. லவங்கப்பத்திரி இவைகளைக் கலகமாக்கி தேங்காய் எண்ணெய் சேர்த்துத் தைலம் காய்ச்சி வடிகட்டியும் சாப்பிட இந்த கரப்பான் நீங்கும்.

மேல்பூச்சு, ஸ்னானத்திற்கான வென்னீர் முதலியவைகளை மற்ற கரப்பான் நோய்களில் கூறியபடி தயாரித்துக் கொள்ளலாம்.

ரேணுக விஸர்ப்பம்

ஆரம்பத்தில் மூன்று நாட்கள் தொடர்ந்து கடும் ஜ்வரம், மணல் வாரிக் கொட்டியதுபோல் உடல் முழுதும் சினப்பு, சினப்பினடியில் சற்றே வீக்கம், மேல்பொடி தூவியதுபோன்ற தோற்றம். தோல் வெடிப்பு, ஆங்காங்கு கொப்புளம் நடுவில் பள்ளமாகவும் துவரம்பருப்பு போன்றதாகவும் கெட்டியும் நீலமும் சிகப்பும் சேர்ந்த நிறத்தில் காணுதல், சீழ் மிகவும் குறைந்தும் வரண்டும் காணப்படுதல்; பழுத்தாலும் வலி மிகுந்து தொடமுடியாதிருத்தல் இவை அடையாளம்.

மேல்பூச்சு : அத்திப்பட்டையைக் காயவைத்து சதகுப்பை சமம் சேர்த்துத் தூளாக்கி தேங்காய்பால் விட்டரைத்துப் பூசலாம். நன்னாரி வேர், அதிமதுரம், அரசம் பட்டை (தானே உலர்ந்து பிரிந்தது) இவைகளை தேங்காய்ப்பால் விட்டரைத்துப் பூசலாம். விருச்சிவேர் மேல் தோல், மரமஞ்சள் பட்டை, சீத்திற்கொடி இவைகளைத் தேங்காய்ப்பாலில் அரைத்துப் பூசலாம்.

விசாலாதி கஷாயம்: காட்டு வெள்ளரி வேர், அதிமதுரம், கருங்காலி வைரம், கோரைக்கிழங்கு, பேய்புடல், சித்தரத்தை, இவை கொண்டு கஷாயம் வைத்து அதை கடுகுரோகிணித் தூள் சேர்த்துக் காலையில் சாப்பிட மலமிளகி விஸர்ப்பம் குறையும். அவிபத்தி சூர்ணம் கொண்டும் மலத்தை இளக்கிக்கொள்ளலாம்.

வாஸாதி கஷாயம்: ஆடாதோடை வேர், திரிபலை, வேப்பம் பட்டை — இவை வகைக்கு ஸமனெடை, எல்லாவற்றிற்கும் சமம் சீந்திற்கொடி, இவைகளைக் கஷாயம் வைத்து தேன் சேர்த்துச் சாப்பிடலாம்.

கதிராதி கஷாயம்: கருங்காலி வைரம், கோரைக்கிழங்கு, புத்தரிச்சுண்டைவேரின் மேல் தோல், பேய்புடல், தேவதாரு, காட்டுவெள்ளரிவேர், இவைகளின் கஷாயத்தைத் தேன் சேர்த்துக் கொடுக்கலாம்.

வ்யாகாதகாதி கஷாயம்: கொன்னைவேர்ப்பட்டை, திரிபலை, மரமஞ்சள்தோல், பேய்புடல், அதிமதுரம், கோரைக்கிழங்கு, விருச்சிவேர்மேல்தோல், இவைகளைக் கஷாயம் வைத்து தேன் சேர்த்துச் சாப்பிடலாம்.

ந்யக்ரோதபல்லவாதி தைலம்: பேராலின் துளிர், அருகு, பர்படகம், வேங்கையிலை — இவைகளை இடித்துப் பிழிந்த சாறு; நன்னாரி, கோஷ்டம், கடுகுரோகிணி, தகரவிதை, சந்தனம், அதிமதுரம், திரிபலை, கச்சோரம், சரளதேவதாரு, ஏலரிசி, லவங்கப்பட்டை, பச்சிலை — இவைகளை யரைத்துக் கலக்கி தேங்காய் எண்ணெய் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டி தைலத்தால் ஸ்னானம் செய்விக்கவும்.

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934
SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

இம்ப்காப்ஸ்

பூரண இயந்திர சாதன வசதியோடு சுத்தமான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை தயாரிக்கிறது

இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் 1944-ம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலையை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறினோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவமாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம்.

இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.

IMPCOPS

தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.

லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை-20

பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிரக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்

மற்ற அலுவலகங்கள்:

4/186, மௌண்ட்ரோடு, மதராஸ்-2 போன்: 86520

43, தெற்குமாசி வீதி, மதுரை P.O.

27, காசிவிஸ்வேஸ்வரன் கோயில் தெரு, கல்தான்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)



mea/IMP./747/M-TA

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

☆

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma. Published by Dr. T S Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2. Printed at Githa Press, Tiruchirapalli-2.